## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.68/2021

பெயர் – ராமுத்தாய்(பி.வா.சா.1)

நாள் – 16.07.2025

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1) வா.சா.ஆ.4 ஆனது எனது அப்பா எனது அம்மாவின் பெயருக்கு A தபசில் சொத்தை எழுதி கொடுத்து, பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆனது எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. அதே போல் வா.சா.ஆ.13 ஆனது எனது அப்பா என் பெயருக்கு B தபசில் சொத்தை எழுதி கொடுத்து பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது, எனது அப்பாவிற்கு தான் தெரியும்.

2) வா.சா.ஆ.4 ல் சாட்சி கையொப்பம் இட்டவர்களை யார் அழைத்து வந்தார்கள் என்றால் நாங்கள் அழைத்து வரவில்லை, சார்பதிவாளர் அலுவலகத்தில் அவர்கள் இருந்தார்கள். சாட்சி கையொப்பம் இட்டவர்கள் எனது அப்பாவிற்கு நெருங்கிய பழக்கம் உடையவரா என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் இட்டவர்கள் எனது அப்பாவிற்கு நெருங்கிய பழக்கம் உடையவரா என்பது குறித்து எனது அப்பாவிற்கு தான் தெரியும் என்றால் சரிதான்.

3) மேற்படி கூறிய ஆவணங்கள் வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆகிய பத்திரங்கள் எழுதப்படுவதற்கு முன்பாக பத்திர எழுத்தரை நானும், எனது கணவரும் தான் ஏற்பாடு செய்தோம் என்றால் சரியல்ல. மேற்படி கூறிய ஆவணங்கள் பதிவு செய்வதற்கு முன்பாக நான் பத்திர அலுவலகத்திற்கு சென்றேனா என்றால் இல்லை, எனது அப்பா இதை குறித்து என்னிடம் கூறிய பின்னரே எனக்கு தெரியும்.

4) வா.சா.ஆ.4 ஆன பத்திரம் பதிவு செய்த அன்று எனது அப்பாவுடன் யார் யார் உடன் சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 பத்திர பதிவு செய்த அன்றைய தேதியிலேயே எனது அப்பா அதை குறித்து என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை. வா.சா.ஆ.4 பதிவு செய்த சமயத்தில் எனது அப்பா என்னுடைய பராமரிப்பில் இருந்து வந்தாரா என்றால் இல்லை,

எனது அம்மாவின் பராமரிப்பில் இருந்து வந்தார். வா.சா.ஆ.4 பதிவு செய்த பின்னராவது எனது அப்பாவுடன் யார் யார் சென்றார்கள் என்ற விபரம் குறித்து எனக்கு தெரியவந்ததா என்றால் இந்த வழக்கு தொடங்கிய பின்னரே வா.சா.ஆ.4 குறித்து எனக்கு தெரியவந்தது.

5) வா.சா.ஆ.4 பதிவு செய்த போது எனது அப்பாவுடன் யார் யார் சென்றார்களோ அவர்களை விசாரித்தால் தான் எனது அப்பா என்ன மனநிலையில் இருந்தார் என்பது குறித்து தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.13 ஆனது முழுக்க முழுக்க எனது குடும்பத்தாரால் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் அதுகுறித்து எனக்கு தெரியாது.

6) வா.சா.ஆ.13 பதிவு செய்த போது எனது அப்பாவுடன் யார் யார் சென்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வா.சா.ஆ.4 மற்றும் 13 ஆவணங்கள் ஏற்படுத்திய சமயத்தில் அதை ஏற்படுத்திய பூல்ராஜீக்கு சொத்துக்களை வில்லங்க பாராதீனம் செய்வதற்கு தெளிவான மனநிலையோ, சிந்தனையோ இருந்தது இல்லை என்றால் சரியல்ல, நல்ல நிலையில் தான் இருந்தார். மேற்படி நான் கூறியவாறு அவர் நல்ல மனநிலையில் இருந்தார் என்பதற்கு இந்த நீதிமன்றத்தில் சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிலைபடுத்தவில்லை என்றால் சரிதான், அவசியமில்லை.

7) A தபசில் சொத்தை எனது அம்மா அனுபவித்து வருகிறார்களா என்பதை குறித்து எனது அம்மாவை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். வா.சா.ஆ.12 ஆவணமான உயிலில் உள்ள சொத்துக்களை வாதி தான் அனுபவித்து வருகிறார் என்றும், 1ம் பிரதிவாதி எந்த காலத்திலும் அனுபவித்து வரவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.12 ஆவணமான உயில் படி சொத்தானது வாதிக்கு தான் பாத்தியப்பட்டது என்றும், 1ம் பிரதிவாதிக்கு எந்த காலத்திலும் பாத்தியப்பட்டது இல்லை என்றால் சரியல்ல.

8) வா.சா.ஆ.12 ஆவணமானது எனது எதிர்வழக்குரையில் ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கானது வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்க வேண்டியது என்றால் சரியல்ல.